# புருஷகார வைபவம்

## (ஸ்ரீ.உ.வே.ந்யாயவேதாந்த வித்வான் ரங்கஸ்வாமி அய்யங்கார்ஸ்வாமி 1934ல் உபந்யஸித்தது)

அபராதமுடைய சேதநர்க்கு – ஒருஸமயத்தில் ஸத்வகுணம் தலையெடுத்து எம்பெருமானை அடைந்து உஜ்ஜீவிக்கக் கருதியபோது, தாம் முன்பு செய்துள்ள பாபத்தின் மிகுதியைக்கண்டு அச்சமுண்டாகும். இவ்வச்சம் சிறிதுமின்றி அவனை எளிதில் அடைந்து உய்வதற்காகக் குற்றங்களைப் பொறுப்பிக்க, அவன் திருமார்பில் இறையுமகலாது பெரியபிராட்டியார் எழுந்தருளியிருக்கிறாள். ஆதலால் அவனை எளிதிலடைந்துய்யலாம் என்பதைத் தெளிவாய் எடுத்துரைப்பதற்காக நம்பூர்வாசார்யர்கள் பலவிடங்களிலும் புருஷகாரவைபவத்தை வெளியிட்டுள்ளார்கள்.

புருஷகாரம் என்ற சொல்லிற்குப் பல பொருள்களுண்டு. புரு – ப$_3$ஹு, ஸுநோதி–த$_3$த$_3$ாதி புருஷ:, புருஷம் கரோதீதி புருஷகார:. இதன் பொருளாவது – ஈச்வரனைச் சேதன விஷயத்தில் மிகுதியாகக் கொடுக்கும்படி செய்கிறாள் என்பதாம். பெரியபிராட்டியார் எம்பெருமானை நோக்கி அபராதமுடைய சேதநனைச் சுட்டிக்காட்டி, ''இவனைக் கோபத்திற்கு விஷயமாக்காமல் இவன் வேண்டிற்றெல்லாம் கொடுத்தருளும்; இங்ஙனம் கொடுத்தாலன்றோ தேவரீர் 'வேண்டிற்றெல்லாம் தரும் கோதிலன்' என்ற விருதைப் பெறுவீர்'' என்று அருளிச்செய்வாள். இதனைக்கேட்ட எம்பெருமானும் அவ்வாறே கொடுத்தருள்வன்.

இன்னும் ''பூரணத்வாத் புருஷ: க்ஷமாதி$_3$ பூர்ணம் கரோதீத்யர்த்த$_2$:''. எம்பெருமானைக் காருண்யாதி குணபூர்ணனாகச் செய்கிறாள் என்பது இதன் பொருளாகும். ஸர்வேச்வரன் ஸமஸ்த கல்யாணகுண பூர்ணனாயிருந்தாலும், ஸ்வாதந்த்ர்யத்தால் அபராதமுடைய சேதநனைக் கண்டவிடத்து 'இவனை நரகத்திற் போட்டு வருத்துவேன்' என்று சீற்றமுண்டாம்போது, க்ருபை முதலிய குணங்கள் தலைமடிந்து கிடக்கும். அப்போது பிராட்டியார் எம்பெருமானை நோக்கித் ''தேவரீர் இந்தச் சேதநன் விஷயத்தில் இப்படிச் சீற்றங்கொள்ளலாகாது; மணற்சோற்றில் கல்லாராய்வாருண்டோ? குற்றஞ்செய்யாதார் எவர் தாமிருக்கின்றனர்? இப்படி வந்தடைகின்ற சேதநனை வெளியே தள்ளிக் கதவடைத்துவிட்டால் வேறெவர்தாம் தேவரீரை வந்தடைவார்கள்? அபராதமுடைய சேதநனை ரக்ஷித்தாலன்றோ தேவரீர் கருணாகரர் என்ற பெயரைப் பெறுவீர்' என்று ஸ்வாதந்த்ர்யத்தால் மறைந்திருந்த க்ருபை முதலிய குணங்களை

வெளிப்படுத்தி அபராதமுடைய சேதநனை அவனுடைய க்ருபைக்கு விஷயமாக்குவாள்.

மேலும், ப்ரு–பாலநபூரணயோ: எம்பெருமானை ரக்ஷகனகச் செய்கிருள் என்றும் புருஷகார ஶப்தத்திற்குப் பொருள் கொள்வதுமுண்டு. எம்பெருமான் அபராதமுடைய சேதநனைக்கண்டு, 'இவனை ரக்ஷிக்கமாட்டேன்' என்று வெறுக்கின்ற காலத்தில் பிராட்டியார் 'அபராதமுடைய இவனை ரக்ஷிக்காத போது தேவரீருக்கு ஸர்வரக்ஷகத்வம் ஜீவிக்காதே' என்று மன்ருடி ரக்ஷிக்கும்படி செய்வாள்.

இந்தப் புருஷகாரத்வம் என்ற குணவிஶேஷம் பெரியபிராட்டியாருக்கே யுள்ளது. எல்லாக் கல்யாண குணங்களையுமுடைய எம்பெருமானுக்கு இந்த குணம் இல்லையோவென்னில்; ஸர்வேஶ்வரன் நித்யேச்சையால் இன்னின்னருக்கு இன்னின்னதுண்டு என்று ஸங்கல்பித்துள்ளானதலால் இந்தப் புருஷகாரத்வம் பிராட்டியாருக்கேயுள்ளதென்ருல் ஒரு குறையுமின்றென்க.

இந்தப் புருஷகாரத்வம் என்ற குணத்தை ஜீவிக்கும்படி செய்கின்ற சில குணங்களுண்டு. அவை; க்ருபை, பாரதந்த்ர்யம், அநந்யார்ஹஶேஷத்வம் என்பன. இவற்றுள் க்ருபையாவது – பிறர் துக்கப்படுதலைக் கண்டு ஸஹியாமை. பாரதந்த்ர்யமாவது – பராதீநமாயிருத்தலாம். அஃதாவது நாயகன் சொற்படி அடங்கியிருத்தலாம். அநந்யார்ஹத்வமாவது – நாயகனையொழிய பிறருக்குரிமை யாகாதிருத்தலாம்.

அபராதமுடைய சேதநனை எம்பெருமானேடு சேர்ப்பதற்குரிய முயற்சி செய்தற்கு க்ருபைவேண்டும். ஸ்வதந்த்ரனை எம்பெருமானை வஶீகரிக்கும் போது பணிவிடையால் வஶீகரிக்கவேண்டுகையால் பாரதந்த்ர்யமும் வேண்டும். எம்பெருமான் பிராட்டியாரிருக்கும் நிலைமைகண்டு நம்மையொழிய பிறரொருவர்க்கும் உரிமையாகாமல் நமக்கே அதிஶயத்தை விளைக்கின்ருளாத லால் இவள் சொல்வதெல்லாம் நம் காரியமாகும்' என்று இவள் சொன்னபடி செய்கைக்கு ஹேதுவாக அநந்யார்ஹத்வமும் வேண்டும்.

உலகத்தில் சிறந்த பதவியிலிருக்கின்ற ஒருவனிடத்தில் காரியஸித்தி யடைய அவன் மனைவியின் சிபார்சை விரும்புவனேல் அவளுக்கு முன்னுரைக்கப்பெற்ற க்ருபை, பாரதந்த்ர்யம், அநந்யார்ஹத்வம் என்ற மூன்று குணங்களும் நிறைந்திருக்கவேண்டும். க்ருபையிருந்தாலன்றிப் பிறரிடத்தில் இரக்கமுண்டாக மாட்டாது. நாயகனுக்கடங்கி நடந்து அவன் மகிழ்ச்சிக்குரிய பணிவிடையைச் செய்தாலன்றி அவன் இவளுக்கு வஶப்படமாட்டான். ஆதலால் பாரதந்த்ர்யமும் வேண்டும். 'இவள் நம்மையன்றிப் பிறரொருவர்க்கும் உரிமைப்படாது நமக்கே அதிசயத்தை விளைக்கின்ருள்; ஆதலால் இவள் நம்மோடு மன்ருடிச் செய்யச்சொல்கின்ற காரியமும் நம் காரியமேயாம்' என்று கருதுவதற்கு அநர்யார்ஹத்வமும் வேண்டும். ஆக, இந்த மூன்று குணங்களுள்

க்ருபை சேதநரைக் கண்டிரங்குவதற்குரியதாயிருக்கும். பாரதந்த்ர்யம் ஸ்வதந்த்ரனை ஈஶ்வரனை வஶப்படுத்துவற்குரியதாயிருக்கும். அநந்யார்ஹத்வம் பிறர் காரியம் செய்யும்படி இவள் சொல்லியபடியே அவன் செய்து தலைக்கட்டுவதற்குரியதாயிருக்கும். இங்ஙனம் இந்த மூன்று குணங்களின் வேறுபாடறிந்து கொள்க.

இனி, இந்த மூன்று குணங்களையும் பிராட்டியார் வெளிட்டபடி விளக்கப் பெறும்— எம்பெருமான் ஸாதுக்களைப் பரிபாலிக்கும் நிமித்தமாக எந்தெந்த வடிவோடு அவதரிக்கின்றானோ அந்தந்த வடிவுக்கேற்றபடி பிராட்டியாரும் அவதரிக்கின்றாளென்பது நியமம். அந்த நியமப்படி ஸர்வேஶ்வரன் சக்ரவர்த்திக்குத் திருக்குமாரனாக அவதரித்தபோது பிராட்டியாரும் ஜநகராஜன் திருமகளாக அவதரித்தாள். அப்பொழுது க்ருபை, பாரதந்த்ர்யம், அநந்யார்ஹத்வம் என்ற மூன்று குணங்களையும் வெளியிட்டுள்ளாள். ‘‘பிராட்டி முற்படப்பிரிந்தது தன்னுடைய க்ருபையை வெளியிடுகைக்காக. நடுவிற்பிரிந்தது பாரதந்த்ர்யத்தை வெளியிடுகைக்காக. அநந்தரம் பிரிந்தது அநந்யார்ஹத்வத்தை வெளியிடுகைக்காக’’ என்று லோகதேஶிகன் அருளிச்செய்ததாலும் அறியலாம்.

முதற்பிரிவாவது —ஸீதாப்பிராட்டியார் சக்ரவர்த்தித்திருமகனோடு தண்டகாரண்யத்தில் எழுந்தருளியிருந்தபோது இராவணன் பிரித்தான் என்ற வியாஜத்தாலே பெருமாளை விட்டுப்பிரிந்து இலங்கையில் அசோகவநத்தில் எழுந்தருளியிருந்ததாம். இந்தப் பிரிவில் ‘‘தே$_3$வ்யா காருண்யரூபயா’’ என்று கருணையே ஒரு வடிவு கொண்டுளதோ என்று சொல்லத்தக்க பிராட்டியாரின் க்ருபை வெளியாகிறது. எவ்வாறெனின்; தேவமாதர்களின் சிறையை விடுவிக்கைக்காகத் தான் சிறையிருந்தாள். இங்ஙனஞ் சிறையிலிருந்தபோது கொடிய ராக்ஷஸப்பெண்கள் தன்னைச் சூழ்ந்துகொண்டு படாதபாடெல்லாம் படுத்தினார்கள். அதுஸமயம் த்ரிஜடை— இராவணனுதியர் அபஜயமடைந்து பெருமாள் வெற்றியடைந்ததாகத் தான் ஸ்வப்நங்கண்டதை இராக்ஷஸப் பெண்களுக்குத் தெரிவித்தாள். இதனைக் கேட்டு அப்பெண்கள் நடுநடுங்கினார்கள். இந்நிலைகண்ட பிராட்டியார் ‘‘ப$_4$வேயம் ஶரணம் ஹி வ:’’ நானிருக்கும்போது நீங்கள் எதற்காக வருந்துகின்றீர்கள் என்று அபயப்ரதானஞ் செய்தாள். இதுதல்லாமலும் இராவணன் போர்க்களத்தில் உயிர் துறந்து கிடந்தபொழுது அநுமன் பிராட்டியிடத்தில் வந்து ‘‘தாயே! இராவணன் இறந்து பட்டான். ஆதலால் முன்பு துன்புறுத்திய இந்த இராக்ஷஸப்பெண்களைச் சித்திரவதம் பண்ணும்படி அடியேனுக்கு உத்தரவு அளிக்கவேண்டும்’’ என்று விண்ணபஞ்செய்தார். அப்பொழுது ‘‘பாபாநாம் வா ஶுப$_4$நாம் வா வத$_4$ார்ஹாணும் ப்லவங்க$_3$ம கார்யம் கருணமார்யேண ந கஶ்சிந் நாபராத்$_4$யதி॥’’ என்று அநுமனுக்கும் உபதேஶித்தாள். தன்னை ஒழிவின்றித் துன்புறுத்திய இராக்ஷஸப் பெண்களிடத்தில் இவ்வளவு பரிவுடையவளாயிருந்தாளென்

பதைக்காட்டிலும் இவள் க்ருபையை வெளியிடுவதற்கு வேறு உதாஹரணம் எடுத்துரைக்க வேண்டுமோ?

நடுவிற்பிரிவாவது– இராவண வதம் முடிந்தபின்னர் பிராட்டியார் பெருமாளுடன் திருவயோத்தியில் எழுந்தருளியிருந்தபொழுது பிராட்டியார் திருவயிறு வாய்த்திருந்தாள். அதுஸமயம் பெருமாள் நகரசோதனையின் பொருட்டு இராத்திரியில் தனிமையாக எழுந்தருளி ஆராய்ந்து வருகின்ற ஸமயத்தில், ஒரு வண்ணன் நெடுநாள் பிறந்தகத்திலிருந்து வந்த தன் மனைவியை நோக்கி, ''நீ இத்தனை நாள் என்னைவிட்டுப் பிரிந்திருந்தாய்; ஆதலால் உன்னைச் சேர்த்துக்கொள்ளமாட்டேன்; பத்துமாதம் தன்னை விட்டுப்பிரிந்து இராவணன் வீட்டிலிருந்த ஸீதையைச் சேர்த்துக்கொண்டிருக்கிற இராமனைப்போல் என்னை எண்ணினையோ?'' என்று கூறினன். இதனை இராமபிரான் கேட்டு மனக்கவலை யுற்று எப்படியாவது லோகாபவாதத்தை நீக்கிக்கொள்ளவேண்டுமென்று கருதினர். பின்னர் கர்ப்பிணியாயிருப்பாரின் விருப்பத்தை செய்வதென்ற முறையை மேற்கொண்டு இராமபிரான் ஸீதாப்பிராட்டியை நோக்கி ''உனக்கு இப்பொழுதுள்ள விருப்பத்தை உரைப்பாயாகில் அதனைச் செய்கிறேன்' என்று கேட்டார். அப்பொழுது பிராட்டியார், 'முன்பு வநவாசஞ் சென்றகாலத்து ருஷிகளின் ஆச்ரமங்களிற்சென்று அவர்கட்டுப் பணிவிடைசெய்ததுபோல இப்பொழுதும் தபோவநங்களையும், கங்காதீரங்களையும் கண்டுகளித்து ஆங்குள்ள மஹர்ஷிகளின் பாதஸேவவையுஞ்செய்து வரவேண்டுமென்று என் மனம் விரும்புகிறது' என்றுரைத்தாள். இதனைக்கேட்ட பெருமாள், இளைய பெருமாளை யழைத்து லோகாபவாத விஷயத்தை அந்தரங்கமாகத் தெரிவித்து 'ஸீதையை அழைத்துக்கொண்டு போய் வநத்தில் விட்டு வருவாய்' என்று கட்டளையிட்டனர். இளையபெருமாளும் அப்படியே பிராட்டியையும் அழைத்துக்கொண்டு கங்கைக்கரையைக் கிட்டினபோது மனமடங்காத துன்பமுற்று பெருமாள் நியமித்ததை விண்ணப்பித்தனர். இதனைக்கேட்ட பிராட்டியார் மனக்கலக்கமுற்று ''இந்த கங்கையில் இப்பொழுதே உயிர் துறந்துவிடுவேன்; இராகவனுடைய வம்ஶநாஶஞ்செய்யலாகாதே; இஃதல்லாமலும் அப்பிரானுக்குப் பரதந்த்ரமான வஸ்துவை எவ்விடத்தி லிட்டுவைத்தாலும் கிடக்கவேண்டியது கடமையன்றோ' என்றருளிச்செய்தனள். இந்தப்பிரிவினுல் பாரதந்த்ர்யம் வெளியாயிற்று.

மூன்ருவது பிரிவு வருமாறு – பெருமாள் அச்வமேதயாகம் செய்கிற காலத்தில் வால்மீகி பகவானுடைய கட்டளையினுல் குசலவர்கள் இராமபிரான் ஸந்நிதியையடைந்து பெருந்திரள் மத்தியில் ஸ்ரீராமாயணத்தைக் கானத்தில் அமைத்துப்பாடினுர்கள். அது பெருமாள் நெஞ்சை யுருக்கியது. இங்ஙனம் பாடியவர்கள் தம்முடைய திருக்குமாரர்களென்று தெரிந்து பிராட்டியினிடத்தில் திருவுள்ளஞ்சென்றது. அப்பொழுது ஒரு தூதனை யழைத்து ''நீ வால்மீகி

பகவான் ஆஶ்ரமத்திற்குச் சென்று மஹர்ஷியின் முன்னிலையில் பிராட்டியினிடத்தில் 'நாளைய தினமே இந்த மஹாகோஷ்டியில் வந்து தான் பரிஶுத்தமாயிருக்குமிருப்பை எல்லாரும் ஒப்புக்கொள்ளும்படி ஆணைசெய்து தரல்வேண்டும்' என்று நாம் உரைத்ததாகச் சொல்லிவருவாய்'' என்று அனுப்பினர். தூதனும் சென்று தெரிவித்தான். பிராட்டியார் வால்மீகி பகவானை முன்னிட்டுக்கொண்டு அந்த மஹாஸபையில் பெருமாள் முன்னிலையில் வந்து ஒடுங்கி நின்றாள். அப்பொழுது வால்மீகி பகவான் இவள் ஶுத்தையென்பதை பலகாரணங்காட்டி எடுத்துரைத்தனர். அதனைக் கேட்ட பெருமாள் ''இவள் ஶுத்தையென்பதை யானுமறிவேன். மஹர்ஷி சொல்லியதாலும் ஒப்புக் கொள்ளத்தக்கதாம். ஆனாலும் லோகாபவாதம் நீங்கும் நிமித்தமாக இந்தக் கோஷ்டியில் ஆணைசெய்து தரவேண்டும்'' என்றனர். பிராட்டியார் கையும் அஞ்ஜலியுமாய்க் கவிழ்தலையிட்டுக்கொண்டு நின்று, ''பெருமாளையொழிய பிறரொருவரையும் மனம், வாக்கு, காயிகங்களால் அறியாதிருப்பது உண்மை யானால் இந்தப் பூமிதேவி எனக்கிடந்தரவேண்டும்'' என்று ஶபதம் செய்த போது, பூமியினின்று ஓர் விமாநம் தோன்றியது. அந்த விமாநம் ஒப்புயர்வற்ற தாயும், வியப்புறத்தக்கதாயும், திவ்யமாயும், வலிமையுடைய பாம்புகளின் தலைகளால் தாங்கப்பெற்றதாயும், திவ்யரத்நங்களால் அலங்கரிக்கப் பெற்ற தாயும் விளங்கியது. அதிலிருந்த பூமிப்பிராட்டியார் ஸீதாப்பிராட்டியைத் தன்னிரு கைகளாலாரத் தழுவியெடுத்து ஆஸனத்திலிருத்தி எல்லாருங்காண தேவர்கள் புஷ்பவர்ஷம் வர்ஷிக்க, பாதாளத்தில் ப்ரவேஶித்தாள். இந்தப் பிரிவினால் அவனுக்கே உரிமை பூண்டிருக்கிற அநந்யார்ஹத்வத்தை வெளியிட்டாள்.

இதுவரையுங் கூறியதினால் புருஷகாரத்வம் பிராட்டிக்கேயுள்ள குணவிஶேஷமென்பதும், இந்த குணத்திற்கு க்ருபை, பாரதந்த்ர்யம், அநந்யார்ஹத்வம் என்று மூன்று குணங்களும் அங்கங்களாகுமென்பதும், இந்த மூன்று குணங்களையும் ஸீதாப்பிராட்டியார் மூன்று பிரிவுகளால் வெளிப்படுத் தினாளென்பதும் குறிப்பிடப்பட்டன.

மேலும் ''ஈஶ்வரீம் ஸர்வபூ₄தாநாம்'' எல்லாருக்கும் பிராட்டியார் ஈஶ்வரியாய் விளங்குகிறாள் என்பதைக்கொண்டு பெரியபிராட்டியாருக்கு உபாயத்வமுண்டென்று சிலர் கூறுவர். உபாயத்வமாவது – விரோதியைப் போக்கி இஷ்டங்களைக் கொடுப்பதாம்; இந்த உபாயத்வம் ஸர்வேஶ்வரன் ஒருவனுக்கே உளதென்பது தத்வமாகும். விஷ்ணுவின் ஒருசில குணஸாம்யம் பற்றி உலகத்தை ஆள்கின்ற அரசனையும் விஷ்ணுவென்று சொல்வதுபோல ஈஶ்வரனிடத்திற் சிபார்சுசெய்து கார்யத்தை முடித்துவைப்பவளாகிய இவளையும் ஈஶ்வரியாகச் சொல்வதுண்டு. இங்ஙனம் உரைத்தாலும் உண்மையை ஆராய்ந்து பார்த்தால் பிராட்டியாருக்குப் புருஷகாரத்வமே உளதெனல்

வேண்டும். ஜீவப்ரஹ்ம ஐக்யம் கூறுகிறவிடத்தில் மற்ற பேதஶ்ருதிகளிற் சொல்லியதற்கு ஏற்றவாறு ஜீவனை ஶரீரமாகக் கொண்டுள்ள ப்ரஹ்மமென்று எவ்வாறு பொருள்கொள்ள வேண்டுமோ அவ்வாறே எம்பெருமானுக்குப் பல விடங்களிலும் உபாயத்வமுண்டென்று சொல்லியதற்கேற்ப பெரியபிராட்டியா ருக்குப் புருஷகாரத்வமுண்டென்றே கொள்ளவேண்டும். உலகத்தில் சிறந்த உத்யோக பதவியிலிருப்பவனுடைய மனைவியின் சிபார்சால் ஒருகார்ய ஸித்தியைப் பெற்றவன், இந்தச் சீமாட்டியால் இக்காரியத்தைக் கொண்டேனென்று சொல்லுவான். இங்ஙனங் கூறினாலும், உத்யோகஸ்தன் உத்தரவு செய்யாத போது கார்யம் பார்க்கமுடியாது. இதனால் உத்தரவு கொடுக்குமியல்பு உத்யோகஸ்தனிடத்திலுள்ளதென்பதும், அவன் மனைவிக்குச் சிபார்சு செய்யுமியல்பே உள்ளதென்பதும் தெளிவாகக் காணலாம். இதனாலும் பிராட்டியாருக்கு புருஷகாரத்வமே உள்ளதென்று நிரூபிக்கலாயிற்று.

இந்த உபந்யாஸத்திற்குத் தலைமை வஹித்த அக்ராஸநர் ஸ்ரீபெரும்பூதூர் ந்யாயவேதாந்த வித்வான் ஸ்ரீ.உ.வே.ஆஸூரி ராமாநுஜாசார்யஸ்வாமி முடிவுரையை கூறினர். அதன் சுருக்கம் பின்வருமாறு—

''வேரிமாறாத பூமேலிருப்பாள் வினைதீர்க்குமே'' என்று நம்மாழ்வார் அருளிச்செய்தார். இங்குப் பூமேலிருப்பவளாகிய பெரியபிராட்டியார் ப்ராப்தி விரோதியாகிய பாபங்களைப் போக்குவாள் என்றதனால் இஷ்டங்களையுங் கொடுப்பாளென்பதும் பெறப்பட்டது. விரோதியைப் போக்கி இஷ்டத்தைத் தருவதே உபாயவஸ்துவுக்குள்ள தர்மமாதலால் உபாயத்வம் பெரியபிராட்டி யாருக்குள்ளதென்பது தெளிவாயிற்று. ''தேவிமாராவார் திருமகள் பூமி ஏவமற்றமரராட் செய்வார்'' என்றதனால் பிராட்டியார் நித்யஸூரிகளையும் ஏவியடிமை கொள்கிறாள் என்பது விளங்கும். இதுவும் பிராட்டியாருக்கு உபாயத்வமுண்டென்பதை வலியுறுத்தும். ஆகவே ஸர்வேஶ்வரன் உபாயபூதனையும் தலைவனையுமிருப்பதுபோலப் பிராட்டியாரும் உபாயபூதை யாயும், தலைவியாயும் இருக்கிறாளென்று சிலர் சொல்வார்கள். இங்ஙனம் சொல்லுவது பொருந்தாது.

நம்மாழ்வார் ''களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்'' என்று அருளிச்செய்தார். இங்கு எம்பெருமானை நோக்கி, உன்னை யடையவொட்டாது தடுக்கின்ற பாபங்களைப் போக்கினும், போக்குவாய்; போக்காதொழியினுமொழிவாய்; உன்னையொழிய வேறொரு ரக்ஷகன் எனக்கில்லை என்றார். இதனால் எம்பெருமான் ஒருவனுக்கே உபாயத்வமுண் டென்று விளங்குகிறது. முன்பு ''வேரிமாறாத பூமேலிருப்பாள் வினைதீர்க்குமே'' என்று பிராட்டியாருக்கும் உபாயத்வம் அருளிச்செய்தது பொருந்துமோ வெனில் – ஒருகர்த்தாவால் அருளிச்செய்யப்பட்ட விஷயங்களில் ஒன்றுக் கொன்று விரோதப்படமாட்டாது. விரோதம் தோற்றுமாகில் விரோதப்படாத முறையை ஆராய்ந்து பொருளுரைக்கவேண்டும். ஶாஸ்த்ரத்தில் ''மா ஹிம்ஸ்யாத்

ஸர்வாபூ₄தாநி'' எல்லா ஜீவவர்க்கங்களுள் ஒன்றினையேனும் ஹிம்ஸைசெய்ய லாகாதென்று சொல்லப்பட்டுள்ளது. அதற்கு விரோதமாக மற்றோரிடத்தில் ''அக்நீஷோமீயம் பஶுமாலபே₄த'' என்று அக்நீஷோமீய யாகத்தில் பஶுவை ஹிம்ஸிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. இப்படி ஒன்றுக்கொன்று விரோதங்கண்டவிடத்து இரண்டிற்கும் பொருத்தமாக ஸோமயாகத்தில் பஶுவை ஹிம்ஸை செய்வதொழிய மற்றவிடங்களில் ஒருயிரினையும் வதைசெய்யலாகாதென்று பொருள் கொள்வதுபோல, இங்கும் விரோதமில்லாத முறையை ஆராய்ந்து பொருள்காண வேண்டும்.

''பூமேலிருப்பாள் வினைதீர்க்குமே'' என்பதில் வினைதீர்க்குமென்று பொதுவாகக் கூறியிருப்பதால் சேதநன் பகவத் விஷயத்தை ஏறிட்டுப்பாராதிருக் கிற ஆரம்ப விரோதியான பாபத்தைப் போக்குகிறுளென்று பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு கொண்டால் ஒன்றுக்கொன்று பொருந்தாதிருந்த விரோதம் நீங்கிவிடும். இதனல் ''களைவாய் துன்பம் களையாதொழியாய் களைகண் மற்றிலேன்'' என்று ஸர்வேஶ்வரன் ஒருவனுக்கே உபாயத்வமுள்ளதென்று குறிப்பிட்டதற்கு விரோதமாக ''பூமேலிருப்பாள் வினைதீர்க்கும்'' என்பதை மேற்கொண்டு பிராட்டிக்கு உபாத்வமுள்ளதென்று நிலைநாட்ட முடியாதென்பது பெறப்பட்டது.

பெரியபிராட்டியாரைப் புருஷகாரமாகக்கொண்டு எம்பெருமானை உபாயமாகப் பற்றிப் பரார்த்த கைங்கர்யஞ்செய்வதே இவ்வாத்மாவுக்குச் சிறந்த ப்ரயோஜநமாகும். பரார்த்த கைங்கர்யமாவது – தனக்கோர் ப்ரயோஜநத்தைச் சிறிதும் விரும்பாமல் எம்பெருமான் முகமகிழ்ச்சிக்கு ஏதுவாகிய பணிவிடைகளைச் செய்வதாம். இந்த ஆத்மாவுக்கு சிறந்த ப்ரயோஜநம் யாதாகும் என்று தீர்மானித் துரைக்க வந்தவிடத்தில் நம்மாழ்வார் ''தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே'' என்று அருளிச்செய்துள்ளார். மேலும் ''உன்தன்திருவுள்ளம் இடர்கெடுந் தோறும் நாங்கள் வியக்க இன்புறுதும்'' என்று அவனுடைய திருவுள்ளக் களிப்பே பரமப்ரயோஜநமாக அருளிச்செய்தார். சந்தனம், புஷ்மம், தாம்பூலம் முதலியன பிறர்க்கே உகப்பை யுண்டுபண்ணுவனவாயிருப்பனபோலச் சேதநனும் எம்பெருமானுக்கே மகிழ்ச்சியை விளைவிப்பவனுக இருக்க வேண்டும். சந்தனம், புஷ்பம் முதலியன அறிவற்ற பொருளாதலால் பிறரை மகிழ்விக்குமேயன்றி தாம் மகிழமாட்டா. ஆத்மா அறிவுடைப்பொருளாதலால் பிறரை மகிழ்வித்தலும், தான் மகிழ்தலுமாகிய இரண்டு தர்மங்களுண்டு. இந்த இரண்டு தர்மங்கள் ஆத்மாவுக்கிருப்பினும், பரதந்த்ரனுகிய இவனது மகிழ்ச்சியும் பரமசேதநனுகிய எம்பெருமானுடைய மகிழ்ச்சியைக்கண்டு ஏற்படுவதாயிருக் கும். ஆதலால் பரார்த்த கைங்கர்யத்துக்கு ஒரு குறையுமின்றென்க. ஆத்மாவுக்குப் பரார்த்த கைங்கர்யமே சிறந்த ப்ரயோஜநமாமென்பது இதனல் பெறப்பட்டது.